30th March 1961]

Sri A. VEDARATHNAM : மாணவர்களுக்கு அரசாங்கம் சலுகை அளிக்க வேண்டி இருப்பதனால் இந்தச் சாதிப் பெயர்கள் குறிப்பிட வேண்டியதாக இருந்தது. இப்போது அரசாங்கம் சாதி அடிப்படையில் இல்லாமல், பொருளாதார அடிப்படையில் கல்விச் சலுகைகளை அளிக்க முன் வந்திருப்பதனால் இனிமேல் மாணவர்களிடம் சாதிகள் பற்றிக் கேட்காமல் இருக்க உத்திரவிடுவார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தக் கல்விச் சலுகை 11-வது வகுப்பு வரையில்தான் கொடுக்கப்படுகிறது. இப்போது பிற்பட்ட இனத்தவர்களுக்கு சம்பளச் சலுகை மட்டும் அல்ல, பலவிடங்களில் ஸ்தானம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. கொஞ்ச காலத்திற்காகவாவது இவை நீடிக்கப்பட வேண்டும். ஆகவே இது தனியாகப் பரிசீலனை செய்து பார்த்து முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறது.

Sri A. GOVINDASAMI : பிற்பட்ட இனத்தவர்களுக்கு இதுவரையில் கொடுக்கப்பட்டு வந்த மாநில சர்க்கார் சலுகை, மத்திய சர்க்கார் சலுகை எல்லாம் இனியும் தொடர்ந்து கொடுக்கப்படும் என்கிற உறுதியை கனம் அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : பட்ஜெட் உரையின் போதே இதைக்கொடுத்தேன். இப்போதும் அந்தச் சலுகை எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்கிற உறுதியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Five-Year Plans

* 1213 *Q.*—**Sri N. R. THIAGARAJAN:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது திட்டத்திலும் சென்னை ராஜ்யத்தில் ஒவ்வொரு இலாகாவும் தனக்கு ஒதுக்கிய பணம் யாவும் செலவு செய்ததா ?

(இ) செலவு செய்யாத இலாகா எவை எவை? காரணமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The information * is given in the paper placed on the table of the House.

Sri N. R. THIAGARAJAN : விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, மின்சாரம் ஆகிய துறைகளில் 38 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் வைத்திய இலாகாவில் போதுமான பணம் செலவழிக்கப்படவில்லையே. அவ் விலாக்காவுக்காக கொடுக்கப்பட்ட ஸ்பெஷல் மானியம் கூடச் செலவழிக்கப்படவில்லையா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே ஸ்பெஷல் மானியம் என்கிற முழு விவரம் தெரியாது, அது உபயோகப்படுத்தப்படவில்லை என்கிற கருத்து நிலவி வருகிறது. இப்போது திட்டங்களுக்காக ஒவ்வொரு இலாகாவுக்கும் இவ்வளவு என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் கடைசியில் ஒட்டு மொத்தமாக—கடனாக இத்தனை கோடி ரூபாய் மானியமாக இத்தனை கோடி ரூபாய் அளவுக்குத்தான் மத்திய சர்க்கார் கொடுத்து வருகிறது. இப்படிப் பெறுவதை நாம் எந்த எந்த இலாகாவில் எந்த எந்தத் திட்டங்களுக்காக எவ்வளவு செலவு செய்வது என்று ஆராய்ச்சி செய்து, முடிவு செய்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். மத்திய சர்க்கார் நமக்குக் கடனாகவும், மானியமாகவும் ஒதுக்கிய தொகை எதையும் வாங்கிக் கொள்ளாமல் விடவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

Agricultural Department (Reorganisation)

* 1214 *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவின் நிர்வாக அமைப்பை மாற்றி அமைக்க நலாகர் கமிட்டி நம் மாநில சர்க்காருக்குச் செய்த சிபாரிசுகள் என்ன?

---

* Printed as Appendix X on page 545 infra.

[30th March 1961

(இ) அவற்றை நம் மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளார்களா?

(உ) அப்படியானால் அதை நிறைவேற்ற என்ன செய்யப்பட்டிருக்கிறது?

(எ) இதனால் சர்க்காருக்கு ஆகும் அதிகச் செலவு எவ்வளவு?

(ஐ) இதில் மத்திய அரசாங்க நிதி உதவிக்கு வகை உண்டா? அதன் விவரமென்ன ?

(ஒ) இதை அமுலுக்குக் கொண்டுவருவதில் உதவ இக்கமிட்டித் தலைவர் ராஜா சுரேந்திர சிங் இம் மாநிலம் வரத் திட்டமுண்டா? அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) The report of the Agricultural Administration (Nalagarh) Committee containing a large number of recommendations, has been received by this Government. The recommendations have been examined by the Government with reference to the conditions obtaining in this State and it is found that most of the recommendations are already in vogue in this State. In respect of certain recommendations requiring implementation, proposals have been received from the Director of Agriculture and they are under examination.

(*d*) The details of expenditure could be arrived at only after the scheme under consideration are finalised.

(*e*) The Government of India have agreed to meet 50 per cent of the expenditure during 1960–61 and 1961–62 and the assistance on this pattern would cease from the year 1962–63 onwards. But, they have agreed to make specific request to the Finance Commission to take into account this expenditure on account of implementing these recommendations while allocating assistance to this State.

(*f*) Yes. Sri Raja Surendra Singh wrote to the Minister for Home in April 1960 that he would visit this State to discuss the proposals regarding implementation of the recommendations of the Agricultural Administration (Nalagarh) Committee. Further intimation regarding his exact date of visit to this State is awaited.

SRI A. VEDARATHNAM : இந்த நலாகர் கமிட்டி இப்போது நம் மாநிலத்தில் உள்ள விவசாய இலாகாவில் என்ன என்ன முக்கியமான குறைபாடுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்? அவற்றை நீக்க அவர்கள் என்ன என்ன சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மாகாணத்தைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய சிபார்சுகள் அநேகம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பெரிதாக ஒன்றும் குறைபாட்டைக் கண்டுபிடிக்கவில்லை.

Dam across Agniar

* 1215 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the proposal to construct a dam across the Agniar in Alangudi taluk, Tiruchirappalli district, will be included in the Third Five-Year Plan?